பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

04 01 2025 **SATURDAY** 7 15 **AM**

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பாரத கிராமப்புற திருவிழாவை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்.

2. கிராமப்புறங்களில் நிலவும் வறுமையை ஒழிப்பதற்கு ஊரக வளர்ச்சித்துறை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்

3. வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான தொலைநோக்கு பார்வையை நனவாக்கும் வகையில் இளைஞர்களின் பங்களிப்பு இருக்க வேண்டும் என்று மத்திய மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது..

4. வடமாநிலங்களில் நிலவும் கடுமையான குளிர் மற்றும் அடர்த்தியான பனிமூட்டம் காரணமாக, ரயில் மற்றும் விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளன.

5. ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில் முஹமதன் கிளப் - ஒருங்கிணைந்த வடகிழக்கு அணிகளுக்கு இடையேயான ஆட்டம் கோல் ஏதுவுமின்றி டிராவில் முடிவடைந்தது.

**>>>>>><<<<<<**

பிரதமர் திரு. நரேந்திர மோடி, புதுதில்லியில் இன்று கிராமப்புற பாரத திருவிழாவை தொடங்கி வைக்கிறார்.

2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய கிராமப்புற இந்தியாவை உருவாக்குதல் என்ற தலைப்பில் இந்த திருவிழா பாரத் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிராமப்புற இந்தியாவில் அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்துதல், பொருளாதாரத்தில் தன்னிறைவு அடைதல், ஊரக சமூக குழுக்களிடையே புதுமையான கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டு, இந்த திருவிழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று தொடங்கி, வரும் 9ஆம் தேதிவரை ஆறு நாட்கள் நடைபெறவுள்ள இந்த திருவிழாவில் இந்தியாவின் வளமான கலாச்சார பாரம்பரியத்தை எடுத்துக் காட்டும் வகையில் கலை நிகழ்ச்சிகளுக்கும், கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கிராமப்புறங்களில் உள்ள பெண்களை, தொழில் முனைவோராக உருவாக்குவது, கிராமப்புற பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மையை கொண்டு வருவது, ஊரகப் பகுதி மக்களிடையே பணப்புழக்கத்தை அதிகரிப்பது ஆகியவற்றை நோக்கமாக கொண்டு இந்த திருவிழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

இந்த ஆண்டுக்குள் வறுமையில்லாத கிராமங்களை உருவாக்குவதை தமது அமைச்சகம் இலக்காக கொண்டுள்ளதாக மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று தமது துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் அமைச்சர்களுடன் அவர் நடத்திய ஆய்வுக் கூட்டத்தின் போது இதனை தெரிவித்தார்.

தேசத்தை கட்டமைப்பதில் கிராமப்புறங்களின் பங்கை எடுத்துரைத்த அமைச்சர், உலகில் வலுவான மற்றும் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க கிராமப்புறங்களின் பங்களிப்பு நிச்சயம் தேவை என்று கூறினார்.

ஊரக வளர்ச்சித் துறையின் பல்வேறு திட்டங்கள் சாமானிய மக்களுக்கு நம்பிக்கை அளிப்பதாகவும், அவர்களின் கனவுகளை நிறைவேற்றும் விதமாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கிராமப்புற வளர்ச்சியில் மத்திய அரசின் அர்ப்பணிப்புமிக்க பணியை இந்த திட்டங்கள் பிரதிபலிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ், 136 கோடி வேலைநாட்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்காக மாநில அரசுகளுக்கு மத்திய அரசு 50 ஆயிரத்து 467 கோடி ரூபாயை வழங்கியுள்ளதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறினார்.

>>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான தொலைநோக்கு பார்வையை நனவாக்கும் வகையில் இளைஞர்களின் பங்களிப்பு இருக்க வேண்டும் என்று மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

சூரத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் இளைஞர்கள் தலைமைப் பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி நிறுவனத்தின் 40வது நிறுவன நாள் விழாவை புதுதில்லியில் இன்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தொடங்கி வைக்கிறார்.

மத்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் திரு. அஜய்குமார் சூட், அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் செயலாளர், அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சிலின் தலைமை இயக்குநர் ஆகியோரும் இந்த நிகழச்சியில் கலந்து கொள்கின்றனர்.

உள்நாட்டில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி நிறுவனங்கள் இடையே ஆராய்ச்சிக்கான சூழலை வலுப்படுத்துதல் மற்றும் பொது நிதியுதவியுடன் ஆராய்ச்சி நிறுவனங்களை தொடங்குதல் உள்ளிட்டவற்றை நோக்கமாக கொண்டு ஆண்டுதோறும் இந்த விழா நடத்தப்படுகிறது.

>>>>>><<<<<<

இந்தியா – ஈரான் நாடுகளுக்கு இடையே வேளாண், வர்த்தகம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான அணுகுமுறைகள் குறித்து இரு நாடுகளும் ஆய்வு செய்துள்ளன.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற 19வது இந்தியா – ஈரான் வெளியுறவு அலுவலக ஆலோசனைக் கூட்டத்தில், வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி, ஈரான் வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. **Majid Takht Ravanchi** ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆப்கானிஸ்தான், மேற்கு ஆசியா உட்பட சர்வதேச மற்றும் மண்டல அளவில் தற்போதைய நிலைமை குறித்தும் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக வெளியுறவு அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ஈரானில் இந்தியாவின் உதவியுடன் கட்டப்பட்டுள்ள **Chabahar** துறைமுகம் மற்றும் ஆப்கானிஸ்தானில் மேற்கொள்ளப்பட்டுவ ரும் மறுகட்டமைப்பு பணிகள் குறித்தும் இந்த கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை, பிரிக்ஸ், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உள்ளிட்ட சர்வதேச அளவிலான அமைப்புகளில் இந்தியாவும் ஈரானும் தொடர்ந்து ஒத்துழைத்து செயல்படுவது என்றும் இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக ஈரான் வெளியுறவுத்துறை இணையமைச்சர் **Dr. Ravanchi,** வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கரை சந்தித்து பேசினார்.

**>>>>>><<<<<<**

வடமாநிலங்களில் நிலவும் கடுமையான குளிர் மற்றும் கடும் பனிமூட்டம் காரணமாக, மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

உத்தரபிரதேசம், ஹரியானா, தில்லி உள்ளிட்ட மாநிலங்களில் இன்று அதிகாலை காணப்பட்ட கடும் பனிமூட்டத்தால், சாலை மற்றும் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டன.

தில்லி விமான நிலையத்தில் விமானங்களின் வருகை மற்றும் புறப்பாடும் பாதிக்கப்பட்டது.

விமானங்களின் வருகை மற்றும் புறப்பாடு குறித்து பயணிகள் மற்றும் அவர்களது உறவினர்கள், விமான நிலையத்தின் சமூகவலைதளத்தை பார்வையிடுமாறு தில்லி சர்வதேச விமான நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது.

நாட்டின் வடமேற்கு மற்றும் மத்தியப் பகுதியில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கடும் பனிமூட்டம் மற்றும் கடும் குளிர் தொடரும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், தில்லி, உத்தரபிரதேசத்தின் சில பகுதிகளில் அதிகாலை மற்றும் மாலை நேரங்களில் பனிமூட்டம் காணப்படும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர், லடாக், கில்ஜித், பலுசிஸ்தான் மற்றும் முஸாபராபாத் ஆகியஇடங்களில் மழையுடன் பனிப்பொழிவும் இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஹிமாச்சலப் பிரதேசத்தில் நாளையும், வரும் நாளை மறுநாளும், பலத்த மழை பெய்யும் என்றும், பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், உத்ராகண்ட்டில் நாளை இடிமின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<<**

ஹைதராபாதில் திரையரங்கு ஒன்றில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் ஒரு பெண் உயிரிழந்தது தொடர்பான வழக்கில், பிரபல நடிகர் அல்லு அர்ஜுனுக்கு ஜாமின் வழங்கப்பட்டுள்ளது.

நாம்பள்ளி நீதிமன்றத்தில் அவர் தாக்கல் செய்த ஜாமின் மனு மீதான விசாரணை நான்கு நாட்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று ஜாமின் வழங்கப்பட்டது.

விசாரணைக்கு அல்லு அர்ஜுன் ஒத்துழைக்க வேண்டும் என்றும், ஞாயிற்றுக்கிழமை தோறும் சிக்காட்பள்ளி காவல்நிலையத்தில் நேரில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும் என்றும் நீதிமன்றம் நிபந்தனை விதித்துள்ளது.

>>>>>><<<<<<

சீனாவில் ஃப்ளு காய்ச்சல் காரணமாக, ஏராளமானோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்களில் வரும் செய்திகளுக்கு அந்நாடு மறுப்பு தெரிவித்துள்ளது.

குளிர் காலத்தில் வழக்கமாக காணப்படும் சுவாசப் பிரச்சினை தான் இது என்றும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டு இந்த பாதிப்பு குறைவாக இருப்பதாகவும் அந்நாட்டு வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டவர்கள் பயணம் செய்யும் அளவிற்கு சீனா பாதுகாப்பாக உள்ளதாகவும் அந்நாட்டின் வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. **Mao Ning** தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில் முஹமதன் கிளப் - ஒருங்கிணைந்த வடகிழக்கு அணிகளுக்கு இடையே நேற்று நடைபெற்ற ஆட்டம் கோல் ஏதுவுமின்றி டிராவில் முடிவடைந்தது.

இன்று புவனேஷ்வரில் நடைபெறவுள்ள போட்டியில் கோவா – ஒடிசா அணியையும், சென்னையில் நடைபெறவுள்ள போட்டியில் ஜாம்ஷெட்பூர் - பெங்களூரு அணியையும் எதிர்கொள்கின்றன

>>>>>><<<<<<

இந்தியாவுக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான இன்று ஆஸ்திரேலியாவும், அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து வருகிறது.

சிட்னியில் நடைபெறும் இப்போட்டியில், உணவு இடைவேளை வரை ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 5. விக்கெட் இழப்புக்கு 101 ரன் எடுத்துள்ளது.

தொடக்க ஆட்டக்காரர் **Sam Konstas** 23 ரன்னுக்கும், **Usman Khawaja, Marnus** தலா 2 ரன்னுக்கும் ஆட்டமிழந்தனர். **Travis Head** 4 ரன் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இந்திய தரப்பில் பும்ரா, முஹமது சிராஜ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும், பிரசித் கிருஷ்ணா ஒரு விக்கெட்டயும் வீழ்த்தினர்.

இந்திய அணியின் முதல் இன்னிங்ஸ் 185 ரன்.

**>>>>>><<<<<<**

உலக **Rapid Chess** சாம்பியன் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பிடித்த **Koneru Humpy** புதுதில்லியில் நேற்று பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்தார்.

இந்த சந்திப்பு குறித்து பிரதமர் விடுத்துள்ள சமூகவலைதளப் பதிவில், **Koneru Humpy-**யின் அறிவுக்கூர்மை இந்திய விளையாட்டு வீரர்களுக்கு உத்வேகம் அளிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தனது திறமையான ஆட்டத்தால், உலகில் இந்தியாவிற்கு மகத்தான பெருமையை அவர் தேடித் தந்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

**>>>>>>END<<<<<<**